## இட ஒதுக்கீட்டை ஒழிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து 24-ஆம் தேதி ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவிப்பு!



சென்னை, ஆக.20

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற பதவிகளுக்கு உரிய முறையில் தேர்வு செய்யாமல், தனியார் நிறுவனங்களில் பணியாற்றிய ஆர்.எஸ்.எஸ்.காரர்களைத் திணித்து இட ஒதுக்கீட்டை ஒழிக்கும் ஒன்றிய அரசின் சமூகநீதிக்கு எதிரான போக்கைக் கண்டித்து மாவட்டத் தலைநகரங்களில் வரும் 24ஆம் தேதி திராவிட மாணவர் கழகம், திராவிடர் கழக இளைஞரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய மாநில அரசுப் பணிகளுக்கான தேர்வாணையம் (Union Public Service Commissions) குறித்து நமது இந்திய அரசியல் சட்டத்தின் 11ஆவது அத்தியாயம் - கூறுகள் (Articles) 315 தொடங்கி, 323 வரை பல்வேறு அம்சங்கள் பற்றி தெளிவாக வரையறுத்துள்ளன.

### அரசியல் சட்டம் என்ன கூறுகிறது?

அதன்படி யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும், தேர்வு மற்றும் நேர்காணல் முறை மூலமே ஆட்சி அதிகாரத்துறை நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்பது அரசியல் சட்டம் கூறும் நடைமுறை.

இதை மீறி, பிரதமர் மோடி பதவியேற்ற கடந்த 10 ஆண்டுகளின் பிற்பகுதியிலும் தற்போதும், மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றிய அரசின் இணைச் செயலர் (Joint Secretary) கூடுதல் செயலர் (Additional Secretary) போன்ற மிக முக்கிய நிர்வாகப் பதவிகளுக்கு, தனியார் துறையில் பணியாற்றிய அனுபவம் உடையவர்கள் என்ற பெயரில் - சீட்டுக் கட்டின் இடையில் சீட்டைச் சொருகுவது போல் அவர்களை அழைத்து தேர்வு செய்ய (Lateral Entry) யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் பிரதமர் மோடி அரசு ஆணையிட்டு நடைமுறைப்படுத்துவது, முற்றிலும் அரசியல் சட்டத்தை மீறிய செயல் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் கூறியுள்ள கருத்து மிகச் சரியான - மறுக்க முடியாத உண்மையாகும்!

இந்திய யூனியன் அரசின் முக்கிய நியமனங்களான அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அய்.எப்.எஸ்., அய்.ஆர்.எஸ். போன்ற பல முக்கிய பதவிகளில் இப்படி இடைச் சொருகல் செய்வது, சட்ட விரோதம் என்பதைத் தாண்டி, அரசியல் சட்டப்படி குடிமக்களின் வேலை வாய்ப்பு உரிமையில் கடைப்பிடிக்க வேண்டிய இடஒதுக்கீட்டையும், சமூகநீதியையும் அடியோடுபுறக்கணிப்பதாகும்!

தங்களுக்கு “வேண்டியவர்களைக்'' கொண்டு வந்து இப்படி நியமனம் செய்யும் முறையை - யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் - அரசியல் சட்டம் கூறும் நடைமுறை - அரசின் சட்ட திட்டங்கள் (Rules and Regulations) இவற்றைப் பற்றியெல்லாம் கடைப்பிடிக்காது, தானடித்த மூப்பாக, தன்னிச்சையாக இப்படி நியமனம் செய்வது எவ்வகையிலும் நியாயம் அல்ல!

### போராடிப் பெற்ற இடஒதுக்கீடு!

ஒன்றிய அரசின் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., போன்ற பெரும் பதவிகளுக்குத் தேர்வும், பயிற்சியும் பெறாதவர்களை, இட ஒதுக்கீடு இன்றி, திடீரென அதிகாரிகளாகக் கொண்டு வந்து அமர்த்தும் இந்த இடைச்செருகல் முறை மூலம் காலங்காலமாக கல்வி உத்தியோகங்கள் மறுக்கப்பட்ட சமூகங்களான எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி ஆகிய பட்டியல் ஜாதியினர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு, சமூகநீதியைப் பறிக்க முயல்கிறார்கள். 5 ஆயிரம் ஆண்டு சமூக அநீதிக்குப் பரிகாரம் தேடும் இந்த இட ஒதுக்கீட்டைப் பெற்று 50 ஆண்டுகள் கூட ஆகவில்லை. அதற்குள் திடீரென்று மின்னல் தாக்கிக் கண்களைப் பறிப்பது போல இட ஒதுக்கீட்டைப் பறிப்பது அநீதியாகும்.

பட்டாங்கமாய் இடஒதுக்கீடு பெற உரிமை பெற்றவர் களின் உரிமைகள் இதன் மூலம் பறிக்கப்படுகின்றன. அதோடு இதில் புதைந்துள்ள மற்றொரு “கண்ணி வெடியி”னையும் ராகுல் காந்தி அம்பலப்படுத்தியுள்ளார்!

இந்த முறையில் Lateral Entry Appointments - 45 பதவிகளுக்கான விளம்பரங்கள் - இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் முதலிய பதவிகளுக்கு விளமபரம போட்டுள்ளார்கள்.

நீண்ட காலமாக அடிமட்டத்திலிருந்து அனுபவம் பெற்று படிப்படியாக பதவி உயர்வு பெற்று இப்பதவிகளில் அமர வேண்டிய சீனியாரிட்டிப்படி உள்ள அதிகாரிகளின் மனம் வெந்து நோகாதா? அதற்கு என்ன சமாதானம்? அவர்கள் உரிமைப் பறிப்பு நியாயமா?

### ஆர்.எஸ்.எஸ்.காரர்களை உள்ளே திணிப்பதா?

“கொல்லைப்புற வழி'' யாக இப்படி நியமனங்கள் திடீரென்று நடைபெறுவதற்கு ஒரு முக்கிய காரணம் தங்களுக்கு வேண்டிய ஆர்.எஸ்.எஸ். உணர்வாளர்களை முக்கியமான கேந்திரப் பதவிகளில் ‘நட்டு வைக்கும்’ ஏற்பாடே இது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கூறியிருப்பது மேலும் அதிர்ச்சி அளிக்கக் கூடிய செய்தியாகும்! Anti Constitutional, Anti Social Justice இரண்டுமே இதில் உள்ளன.

மேலும் இரண்டு மாதங்களுக்கு முன் - பல ஆண்டுகள் பதவியிலிருக்க வேண்டிய யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (UPSC) தலைவர் தனது பதவியிலிருந்து திடீரென்று ராஜினாமா கடிதம் கொடுத்து விட்டு விலகியதும், அதனை உடனே மோடி அரசு ஏற்றதும் - ஒரு வேளை இம் மாதிரி அரசியல் சட்ட விரோத செயல்களுக்குத் தானும் துணை போவதாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால் இருக்கலாம் என்ற ஊகங்களுக்கும் இது இடந்தரக் கூடுமல்லவா?

இதனை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அத்துணைக் கட்சிகளும் அமைப்புகளும் கண்டித்து, இந்தத் திடீர் உரிமைப் பறிப்பு, தனியார் துறையின் ஆதிக்கம் ஆகியவற்றுக்கெதிராக கண்டனக் குரலை நாடு தழுவிய நிலையில் ஏற்படுத்துவது அவசர அவசியமாகும்!

சமூகநீதி மண் - பெரியார் மண்ணான தமிழ்நாடு இதனை எதிர்த்து பெருந்திரளாக - பெரும் கண்டனங்களை எழுப்ப வேண்டும்.

### ஆகஸ்டு 24–இல் போராட்டம்!

வருகிற 24-ஆம் தேதி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் திராவிடர் கழக இளைஞரணி, திராவிட மாணவர் கழகம் முதற்கட்டமாக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திடும்.

இதனை மக்களிடம் விளக்கி ஆங்காங்கு பிரச்சார மேடைகள் முதல் பல சமூகநீதி பாதுகாப்புப் பணிகளைத் துவக்கமின்றி உடனே துவக்கிட வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.08.2024) சென்னை, பாலவாக்கம், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியை சாலை விரிவாக்க பணியின் காரணமாக இடித்து அகற்றப்பட வேண்டியிருப்பதால் மாற்றாக சென்னை பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான ஏ.எல்.எம்.மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி இயங்க ஏதுவாக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் மதியழகன், ரவிச்சந்திரன், கல்வி நிலைக்குழுத் தலைவர் விசுவநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்ட ஆட்சியர் திருமதி.கலைச் செல்வி மோகன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஆக.20-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், காஞ்சிபுரம் மாவட்டம் சார்பாக 2024ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்தல் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் அறிவிப்பு வருமாறு :

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், காஞ்சிபுரம் மாவட்டம் சார்பாக 2024ம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கான விளையாட்டு போட்டிகளில் பல்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், பொது மக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 27 விளையாட்டுக்கள் 53 வகைகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்பட உள்ளது.

மேலும், மாநில அளவில் தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும். குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட உள்ளது மற்றும் இவ்வாண்டு தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு முதல் முறையாக நான்காம் இடம் பெற்றவர்களுக்கும் மூன்றாம் பரிசிற்கு இணையாக வழங்கிட உள்ளது. இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும். காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணாக்கர்களுக்கும், 17 வயது முதல் 25 வயது வரை கல்லூரி மாணக்கர்களுக்கும், 15 வயது முதல் 35 வயது வரை பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களான நிரந்தரப் பணியாளர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விவரத்தினை http://sdat.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்து அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து பதிவேற்றம் செய்திடலாம்.

போட்டிகளில் பங்கேற்க முன்பதிவு செய்திட கடைசி நாள். 25.08.2024 ஆகும். இணையதளம் மூலம் பதிவு செய்தவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்க முடியும். மேலும் விபரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அலுவலகத்திலோ (அ) 9514000777 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

## மின்வாரிய பராமரிப்புப் பணி காரணமாக - சென்னையில்

# இன்று மின் விநியோகம் நிறுத்தப்படும் இடங்கள்!

## மின்சார வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஆக.20-

சென்னையில் 20.08.2024 அன்று காலை 09.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை மின்வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மதியம் 2.00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின்விநியோகம் கொடுக்கப்படும்.

புழல்: பாலாஜி கார்டன், புதுநகர், பை பாஸ் சாலை, அரூன் உல்லாச நகரம், சானிதி காலனி, புதுநகர் 5 மற்றும் 6வது தெரு, தர்காஸ் சாலை.

திருவெள்ளவயல் : திருவெள்ளவாயல், ஊரணம்பேடு, காட்டுப்பள்ளி, நெய்தவாயல், வாயலூர், காட்டூர், திருப்பாலைவனம், கடப்பாக்கம், காணியம்பாக்கம், செங்கமுநீர் மேடு, ராமநாதபுரம், மெரட்டூர், கல்பாக்கம், வெள்ளம்பாக்கம்.

சிறுசேரி: சோழிங்கநல்லூர், எல்காட் அவென்யூ ரோடு, மாடல் ஸ்கூல் ரோடு கிளாசிக் படிவங்கள், நெடுஞ்செழியன் தெரு, நாராயணசாமி தெரு, படவட்டம்மன் கோயில், பரமேஸ்வரன் நகர், பொன்னியம்மன் கோயில் தெரு, குமுரன் நகர், டி.என்.எச்.பி. முழுப் பகுதி, அலமேலுமங்காபுரம், காந்தி நகர், ஓ.எம்.ஆர்., நூக்கம்பாளையம் சாலை, திருவள்ளுவர் சேலைப்பட்டி, செம்மஞ்சேரி, ஜவஹர் நகர், சத்ய பாமா, ஜே.பி.ஆர், செயின்ட் ஜோசப் கல்லூரி, வில்லேஜ் நெடுஞ் சாலை, வேலு நாயக்கர் தெரு, நேரு தெரு, கணேஷ் நகர், மேடவாக்கம் சாலை, விப்ரோ சாலை, அண்ணா தெரு, தேவராஜ் நகர், புதிய குமரன் நகர், எழில் நகர், காந்தி தெரு, எம்ஜிஆர் தெரு.

மடிப்பாக்கம்: ஷீலா நகர், அன்னை தெரசா நகர், சதாசிவம் நகர், கோவிந்தசாமி நகர், ராஜாஜி நகர், ராம் நகர் (எஸ்), குபேரன் நகர், மகாலட்சுமி நகர், ராம் நகர் (என்), ராஜராஜேஸ்வரி நகர், பஜனை கோயில் தெரு, பெரியார் நகர், குளக்கரை தெரு, அண்ணா நகர், ராஜலட்சுமி நகர்.

ஆழ்வார்பேட்டை: டி.டி.கே.சாலையின் ஒரு பகுதி, மற்றும் 1வது குறுக்குத் தெரு, டி.டி.கே. சாலை, பீமன்னா முதலி 1 மற்றும் 2வது தெரு, சி.வி. ராமன் சாலை, சி.பி. ராமசாமி தெரு, பீம்மன்னா கார்டன் சாலை, பாவா சாலை, ஆனந்த சாலை, டாக்டர். ரெங்கா சாலை, ஆனந்தபுரம், அசோகா தெரு, ஸ்ரீ லட்பி காலனி, சுந்தர்ராஜன் தெரு, லம்பத் அவென்யூ, சுப்ரமணியம் தெரு, கன்னி கோவில் பள்ளம், கன்னி கோவில் மேடு, விசாலாட்சி தோட்டம், சுப்புராயன் சாலை, நரசிமாபுரம், செயின்ட் மேரிஸ் ரோட்டின் பகுதி, ஆர்.ஏ. புரம், வி.கே. ஐயர் சாலை, சீனிவாச சாலை, வாரன் சாலையின் ஒரு பகுதி, வெங்கடேச அக்ரகாரம், தெற்கு மாட தெருவின் ஒரு பகுதி, ஜெத் நகர் 1 முதல் 3வது தெரு, டி.வி. பேட்டை தெரு, விநாயகம் தெரு, வி.சி. கார்டன் 1 முதல் 3வது தெரு, டிரஸ்ட்பாக்கம் வடக்கு மற்றும் தெற்கு, சேத்தாம்பாள் காலனி, ஜே.ஜே. சாலை, எல்டாம்ஸ் சாலையின் ஒரு பகுதி, ஸ்ரீமான் ஸ்ரீநிவாசா தெரு, முரேஸ் கேட் சாலை, பார்த்தசாரதி தெரு, ஆழ்வார்பேட்டை பிரதான தெரு, பெருமாள் கோயில் தெரு.

கோவூர்: குன்றத்தூர் மெயின் ரோடு, மேற்கு மாட தெரு, கிழக்கு மாட தெரு, வெங்கடேஷ்வரா நகர், தர்ம ராஜா கோயில் தெரு, இந்திரா நகர், கோவூர் காலனி, அம்பாள் நகர்.

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

# நீலகிரி மாவட்ட மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள்!

## சிறப்புப் பரிசு வழங்கப்படுகிறது!

நீலகிரி, ஆக.20-

2024-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்தநாள்கள் தொடர்பில் நீலகிரி மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 28.08.2024, 03.09.2024 ஆகிய நாள்களில் நீலகிரி மாவட்டம், உதகை அரசுக் கலைக் கல்லூரியில் பேச்சுப்போட்டிகள் நடைபெற உள்ளன. அப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறும் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முறையே முதல்பரிசு ரூ.5000/-, இரண்டாம் பரிசு ரூ.3000/-, மூன்றாம் பரிசு ரூ.2000/- என்ற வகையில் வழங்கப்பெற உள்ளன. மேலும், பள்ளி மாணவர்களுக்கென நடத்தப்பெறும் பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுள் அரசுப் பள்ளி மாணவர்கள் இரண்டுபேரைத் தனியாகத் தெரிவுசெய்து ஒவ்வொருவருக்கும் சிறப்பு பரிசுத்தொகை ரூ.2000/- வீதம் வழங்கப்பெறவும் உள்ளன.

பள்ளித் தலைமையாசிரியர்கள் அவர்தம் பள்ளி மாணவர்களிடையே முதற்கட்டமாக முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்மன்றம் வாயிலாக முதல் சுற்று பேச்சுப் போட்டிகள் கீழ்நிலையில் நடத்தி மாணவர்களைத் தெரிவுசெய்து மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க முதன்மைக் கல்வி அலுவலர் வழியாகவும் கல்லூரிப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கல்லூரிகளின் முதல்வர்கள் வழியாகவும் பின்வரும் முகவரியில் நேரில் / அஞ்சலில் அல்லது ootytamilvalarchi@gmail.com என்ற மின்னஞ்சலில் 23.08.2024-ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்தநாள் தொடர்பில் 28.08.2024, 03.09.2024 ஆகிய நாள்களில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி காலை 9.00 மணிக்கும் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி காலை 10.30 மணிக்கும் தொடங்கப்பெறும். இப்போட்டிகளில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவஃமாணவிகள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் 33 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை,ஆக.20-

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. 33 மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருச்சி, பெரம்பலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், கரூர், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, அரியலூர், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தென்காசி, நெல்லை, குமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் லேசான இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.க இளைஞர் அணி சார்பில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற ‘என் உயிரினும் மேலான’ என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியை தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு சான்றிதழ் வழங்கினார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா முன்னிலை வகித்தார். நடுவர்களாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட பொன்.முத்துராமலிங்கம், வி.சி.சந்திரக்குமார், மதுரை பாலா, தமிழ்காமராசன், மருத்துவர் சஃபிசுலைமான், கணேஷ்பாபு செயல்பட்டனர், இந்நிகழ்ச்சியில் சண்.இராமநாதன், சு.ப.தமிழழகன். அஞ்சகம் பூபதி. க.முகில்வேந்தன், ஜி.கே.எம். ராஜா, ஆதி.ராஜேஷ் உள்ளிட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், வண்டிச்சோலை ஊராட்சி, சோலாடா மட்டத்தில், புதிய பகுதி நேர நியாய விலைக்கடையினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (19.08.2024) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி.சுனிதாநேரு உட்பட பலர் உள்ளனர்.